<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>

<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

**<u>O.S.No.109/2021</u>**

பெயர் :– சந்திரா (P.W.–1)

க/பெ. :– சட்டையப்பன்.

தேதி :–02.06.2025.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை</u>:–**

நானும் எனது மகளும் வாதியிடம் 10.06.2016 தேதியில் குடும்ப செலவிற்காகவும் வியாபார அபிவிருத்திக்காகவும் கடன் பெற்றுக்கொண்டு ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான். 15.04.2018 தேதியில் அந்த பிராமிசரி நோட்டின் பின்புறம் ரூ.1,00,000/– வரவு வைத்து கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அன்றைய தேதியிலேயே அந்த பிராமிசரி நோட்டினை திரும்ப பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். திரும்ப தருகிறேன் என்று கூறினார்கள். பிராமிசரி நோட்டில் 1–1/2 சதவீதம் வட்டி என குறிப்பிடப்பட்டு கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 4 பைசா வீதம் ரூ,4000/– கொடுத்துள்ளேன். மேற்படி வட்டியை கொடுத்ததற்கு எந்தவித ரசீதும் தரவில்லை. நான் எந்த வட்டியும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. 15.04.2018 தேதியில் வாதியின் கணவர் கடன் தொகைக்காக ரூ.1,00,000/– பெற்றுக்கொண்டு ரசீது வழங்கியுள்ளார் என்றால் சரிதான். அதில் கடன் கணக்கு முடிந்துவிட்டது என்று நான் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான்.

கடன் தொகை பாக்கி இருந்ததால் தான் முழுத்தொகை செலுத்தப்பட்டது என்று எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக ரூ.1,00,000/– மட்டும் கடனாகப்பெற்றேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மாதம் தோரும் ரூ.4,000/– வட்டி கொடுத்தேன் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. ரூ.1,00,000/– கொடுத்ததற்கு எழுதிக்கொடுத்ததுபோல் வட்டித்தொகை கொடுத்திருந்தால் அதற்கும் எழுதிக்கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. வட்டிக்கு நாங்கள் எழுதிக்கொடுக்க மாட்டோம் என்று கூறினார்கள். மேற்படி விபரத்தினை எனது பதிலறிவிப்பிலேயோ, எனது எதிர் வழக்குரையிலோ கூறவில்லை என்றால் சரிதான். நான் வாதியை ஏமாற்றும் நோக்கில் பொய்யான விபரங்களைக்கூறி வழக்கினை நடத்துகிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி இந்த பாக்கி கடன் தொகையை திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.